**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 03 - 2018**

---

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 03 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 03 இன் மொத்த நீளம் வெட்டியவிலிருந்து அந்தரவேவ வரை அண்ணளவாக 15 கிலோமீற்றராகும். அம்பாந்தோட்ட சர்வதேச மைய அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆதரவளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தலிற்கு வீதி வலையமைப்பின் அபிவிருத்தியில் ஒரு பிரதான உருப்படியாக அடயாளப்படுத்தல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். முன்மொழியப்பட்ட தெற்கு அதிவேகப்பாதை இடமாறல் மாத்தறை தொடக்கம் பெலியட்ட (பகுதி 01) பெலியட்ட தொடக்கம் வெலிய (பகுதி 02), வெலிய தொடக்கம் அந்தரவேவ (பகுதி 03) மற்றும் அந்தரவேவ ஊடாக மத்தளை தொடக்கம் ஹம்பாந்தோட்டை (பகுதி 04) போன்ற நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பகுதி 03 இன் கீழான நிர்மான வேலைகளின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 36,174 மில்லியன் ஆக உள்ளதுடன் சிவில் வேலைகளின் கிரயம் ரூபா 31,574 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 252 மில்லியன் ஆகிய தொகைகள் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 சனவரி 25 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2019 ஜூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 8 இற்கு முரணாக, வட்டி கொடுப்பனவுகளிற்கான ஏற்பாடு 2018 திசெம்பரில் உள்ளவாறு காணிகள் மீது செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | காணி சுவீகரிப்பு கொடுப்பனவுகளின் தாமதம் காரணமாக வட்டியினை அடையாளப்படுத்த முடியாமலிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| | கணக்காய்வாளரின் கருத்து மற்றும் அவதானிப்புக்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | அதிவேகப்பாதையின் நிர்மான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2019 ஜூலை 09 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டு 2019 நவம்பர் 07 இல் பொது மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டிருந்தது. இருப்பினும், பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களின் உற்பத்தி உத்தரவாதப்பத்திரம், பராமரிப்பு ஆவணங்கள், மேலும்பல.. போன்ற அடிப்படை ஆவணங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட பூர்த்தியாக்களின் போது ஆவணங்கள் மற்றும் இயந்திரங்களை சமர்ப்பிப்பதில் தேவையற்ற தாமதம் மற்றும் செயற்திட்ட கிரயத்தனை அதிகரித்து சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்தக்கூடும். | உடன்பட்டனர். | செயற்திட்ட செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு முறையான கண்காணிப்பு நடைமுறை பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், அதிவேகப்பாதையின் நிர்மான வேலைகளின் 353 உருப்படிகள் மற்றும் பொதுவான வேலைகளின் 44 உருப்படிகள், அதிவேகப்பாதையுடன் தொடர்புபட்ட 03 ஏனைய வீதிகளின் நிர்மான | குறைபாடுகள் நிபர்த்தி செய்தல் காலம் கையேற்பு பத்திர திகதியிலிருந்து கவனத்தில் கொள்ளப்படும். எனவே, குறைபாட்டு நிபர்த்தி காலப்பகுதியின் | பொறியியலாளர் தனது விருப்பப்படியும் முடிக்கப்பட்ட பணிகளை கருத்தில் கொண்டு, நிலுவையிலுள்ள குறைபாடுகளின் பட்டியலுடன் டிஓசி | மிகுதி வேலைகளை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேலைகளின் 234 உருப்படிகள் மற்றும் சூரியவேவ மற்றும் வேட்டிய விலுள்ள இணைக்கப்பட்ட கட்டிடங்களின் நிர்மான வேலைகளின் 190 உருப்படிகள் என்பன 2019 ஜூலை 09 இல் கையேற்பு பத்திரம் வழங்கப்படும் நேரத்தில் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டது. | போதான சாத்தியமான குறைபாடுகள் மீளப்பெறமுடியாமல் போகக்கூடும். | வழங்கியதுடன், சிறிதளவனதும் பூர்த்தியாக்களிற்கான பொதுமக்கள் ஆலோசனை தேவைக்காகவும் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் இல்லவிடில் அப் பகுதி மக்களின் உணர்திறனை குறைக்கும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | அதிவேகப்பாதை கையேற்கப்பட்ட திகதியிலிருந்து 5 மாதங்களின் பின்னர் 2019 நவம்பர் 07 இல் பொதுமக்களிற்காக திறந்து விடப்பட்டிருந்ததுடன் அதன்படி, செயற்திட்டத்தின் அனைத்து வேலைகளிற்குமான குறைபாட்டு நிபர்த்தி காலம் 2020 ஜுன் 11 இல் பூர்த்தியாகியிருக்கும். இந் நிலமை பொதுமக்கள் பாவனைக்காக வீதி காணப்படாததன் காரணமாக 05 மாதங்களிற்குள் எவ்வித குறைபாடுகளும் ஏற்படாததை தூண்டியது. | குறைபாட்டு நிபர்த்தி காலம் பூர்த்தியானதன் பின்னரான மற்றய 5 மாதங்களிற்கும் ஏற்படும் சாத்தியமான குறைபாடுகள் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு செலவினை ஏற்படுத்தும். | பொதுமக்களிற்காக அதிவேகப்பாதையின் திறத்தல் நெடுஞ்சாலைகள் அமைச்சின் தேசிய பாதையோர சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர் செய்யப்படல் வேண்டும். இது சட்டரீதியான வரையுனர்கள் மற்றும் அரச அச்சகத்துடனான சட்ட நடைமுறைகளை பின்பற்ற ஆர்டிஏ மற்றும் அமைச்சிற்கு 5 மாதங்கள் எடுத்திருந்தன. அதுதவிர, அரசாங்கம் அதிவேகப்பாதையின் முறையான செயற்பாடுகளிற்காக பிரிவு 3 மற்றும் பிரிவு 4 இனை ஒன்றாக திறக்க கொள்கை தீர்மானம் ஒன்றை எடுத்திருந்தது. | செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது இவ்வகையான தீர்மானங்களின் விளைவினை கவனத்தில் கொள்ளல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 14.3 இன் பிரகாரம், ரூபா 474 மில்லியன் தொகையான இடைக்கால கொடுப்பனவு பத்திரம் கொடுப்பனவு செய்ய கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இருப்பினும், ரூபா 268 மில்லியன் தொடக்கம் ரூபா 455 மில்லியன் என்ற வீச்சிலான தொகையுடய இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் 07 விடயங்களின் செலுத்தப்பட்டிருந்தமை மேற்கூறிய தேவைப்பாடுகளிற்கு முரணாக காணப்படுகின்றது. | இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை மதிப்பீடு செய்வதன் மீதான கிரயத்தின் மிகை அதிகரிப்பு. | பொறியியலாளர் ஒப்பந்ததாரர்களின் காசுப்பாய்ச்சலை மேம்படுத்தவும் வேலைகளின் செயலாற்றலை பராமரிக்கவும் குறைந்தபட்ச பெறுமதியான ரூபா 474 மில்லியனிற்கு குறைவாக ஒப்பந்ததாரரிற்கு கொடுப்பனவை பரிந்துரைத்திருந்தார். அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிகள் அதிகமாகும். | கிரயம், நேரம் மற்றும் ஒப்பந்ததாரர்களிற்கான தேவையற்ற நன்மைகள் போன்றவற்றை குறைக்க ஒப்பந்த நிபந்தனையில் கூறப்பட்ட விதிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 3.3 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தொழிநுட்ப விபரக்குறிப்பின் பிரிவு 401.7.1 இன் கீழ் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், அதிவேகப்பாதையின் சர்வதேச கடினத்தன்மை சுட்டி அதிவேகப்பாதையில் வீதி தாங்குதிறன் மற்றும் மோட்டார் வாகனங்களின் மிருதுவான ஓட்டம் என்பவற்றை உறுதிப்படுத்த ஒவ்வொரு கிலோமீற்றறிற்கும் 1.5 - 2.3 மீற்றர்கள் என்ற வீச்சில் இடைவெளி காணப்பட வேண்டிய தேவையுடயதாக இருக்கின்றது. சோதனை அறிக்கைகளின் பிரகாரம், உரிய சுட்டியானது ஒப்பந்ததாரரினால் அடயப்பெற்றிருந்தது. இருப்பினும், அதிவேகப்பாதையின் சில பிரிவுகளின் உண்மைத்தன்மை மோட்டார் வாகனங்களின் நல்ல ஓட்ட நிலமையினை உறுதிப்படுத்த நல்ல | பொதுமக்கள் போக்குவரத்து வசதியாக இருக்காமலிருப்பதுடன் பொது மக்களின் வாகனங்களின் பராமரிப்பு கிரயம் அதிகரிக்கும். | பல்வேறு தொழிற்பாடுகள் வலையமைப்பு அளவை வாகனத்தினை பயன்படுத்தி ஐஆர்ஐ மதிப்பீடானது குறிப்பிடப்பட்ட படி வீதிகளின் சவாரி தரத்தினை ஏற்றுக்கொள்ள உலகலாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் உறுதிப்படுத்தப்பட்ட முறையாகும். கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 1.5 - 0.9 எம்கேஎம் இடையில் சுட்டிக்காட்டப்பட்ட ஐஆர்ஐ வீச்சு ஒப்பந்த விபரக்குறிப்பின் பிரிவு 401.7.1 இல் குறிப்பிடப்பட்டதற்கு சிறந்த சவாரி தரமாகும். எனவே | நிபுனதது வர்களின் அறிவுரை பெறப்பட வேண்டியதுடன் எதிர்கால செயற்திட்டங்களில் தொழிநுட்ப விபரக்குறிப்பினை தயாரிக்கும் போது அளவைகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதுமானதாக இருக்காமை கணக்காய்வு விஜயத்தின் போது அவதானிக்கப்பட்டது. | | இவ்வீச்சிலான அளவையில் எல்வித பிரச்சினையும் இல்லை. | |
| (ஆ) | சாவடி மற்றும் லேன் கமராக்களின் நீண்ட கடைவேலிகள் போன்றவற்றின் நிறுவல், மேலும்பல.. போன்ற பாரிய வேலைகள் சூரியவேவ மற்றும் வட்டியவிலுள்ள இடமாறல்களின் செய்யப்பட்டிருக்காமை 2019 செப்தம்பர் 26 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு வெளிக்கள விஜயத்தின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தேவையற்ற முறையில் செயற்திட்ட அனைத்து கிரயங்களும் அதிகரிப்பதற்கான சாத்தியம். | ஈடிசீ லேன் தவிர்ந்த நீண்ட தடை வேலியின் நிறுவல் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் சாவடி கமராக்களின் பொருத்தல் கூட பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. தகவல் இணைப்பு சூரியவேவ இடமாறலில் விரைவில் பூர்த்தி செய்ய முடியும். | நிர்மான வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்ததாரர் மற்றும் அமுல்படுத்தல் முகவரிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட 2016 ஓகஸ்ட் 25 இன் புரிந்துனர்வு ஒப்பந்ததத்தின் பிரகாரம், பொகுண சந்தி – கந்தரமன் சந்தி வீதி மற்றும் நாபடா கஸ்வேவ – அன்தரவேவ வீதி போன்றவற்றின் ஏனைய வீதிகளின் புனர்நிர்மான வேலைகள் 2019 ஜூன் 12 இல் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், 2019 செப்தம்பர் 27 வரை கூட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையற்ற முறையில் செயற்திட்ட அனைத்து கிரயங்களும் அதிகரிப்பதற்கான சாத்தியம். | அதிவேகப்பாதை வீதி வரையரைக்குட்பட்ட நிழக்கீழ் மேற்பரப்பு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய இடங்களிலுள்ள சேதங்களில் சரி செய்தல் செயன்முறையில் உள்ளது. | நிர்மான வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 பயன்படுத்தப்படாத/குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| | **கணக்காய்வு விடயம்** | **விளைவு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **கணக்காய்வாளர் பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| (அ) | உண்மையான அளவைப்பட்டியலின் பிரகாரம் வாகனவகை 02 (பெற்றோல் கார்) இற்கு ரூபா 10 மில்லியன் வழங்கப்பட்டிருந்தும், பீஓகியுவ் வின் ஏற்பாடுகளை மிஞ்சி ரூபா 23 மில்லியன் தொகையில் 2016 செப்தம்பர் 26 இல் 2 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. அவ்விரு வாகனங்களிலும், செயற்திட்ட | நிதிகளை முறைகேடு செய்வதற்கான சாத்தியம். | இவ்வாகனம் அமைச்சரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் வேலைகள் பணிப்பாளரிற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டிருந்ததுடன் அதன்படி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளரிற்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. | செய்யப்பட்ட கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படாத ரூபா 11.5 மில்லியன் தொகையான ஒரு வாகனம் ஆர்டிஏ வின் வேலைகளின் பணிப்பாளரிற்கு வெளியே/வேறாக காணப்பட்டது. தற்போது, இவ்வாகனம் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், அதே உருப்படி அதன் பின்னர் 2018 ஜுன் 05 இல் பீஓகியுவ் வில் மாற்றியமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | செயற்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காத வாகனத்தின் கொள்வனவு மற்றும் பராமரிப்பிற்காக செயற்திட்ட நிதியினை மோசடி செய்து 2018 ஒக்டோபர் 29 வரை அதே வாகனத்தின் பராமரிப்பிற்காக செயற்திட்டமானது ரூபா 3.4 மில்லியனை செலுத்தியிருந்தது. | நிதிகளை முறைகேடு செய்வதற்கான சாத்தியம். | தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட விடயங்களை ஏனைய நிறுவனங்களுடன் கலந்தாலோசிப்பதில் அவர் ஈடுபட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. எனவே இவ்வாகனம் செயற்திட்டத்தினூடாக பராமரிக்கப்பட்டிருந்தது. | செய்யப்பட்ட கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 புறநடையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் சாத்தியவள கற்கையின் பிரகாரம், வெட்டிய தொடக்கம் அந்தரவேவ வரையான அதிவேகப் பாதையிலுள்ள சேவை பகுதிகளை நிர்மானிக்க அடயாளப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், சேவை பகுதிகளை வடிவமைக்கவோ அதிவேகப் பாதையின் பயன்பாட்டாளர்களிற்கு வசதிகளினை வழங்குவதற்கான அதிவேகப்பாதையின் அளவைப்பட்டியலில் ஒதுக்கீடுகள் செய்யவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவை பகுதிகள் இல்லாமல் வெளிப்பன்ன தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரையான நீண்ட தூரத்திற்கு (173கி.மீ) பொது மக்கள் பயனம் செய்ய சிரமப்படுவர். | சேவைபகுதிகளின் நிர்மானத்திற்காக ஈஎஸ்ஈபி ஒப்பந்தங்களில் எவ்வித ஏற்பாடுகளும் இல்லாததுடன் இது அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் சீனா எக்ஸிம் வங்கியிடமிருந்தான ஒப்புதலுடன் ஒப்பந்த சேமிப்பிலிருந்து செய்யப்படல் வேண்டும். | சேவைப்பகுதிகளை இயலுமானவரை விரைவாக எளிதாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |